# கிருபையுள்ள வார்த்தை®

## KIRUBAIYULLA VAARTHAI

லூக்கா (LUKE) 4:22

**Vol - 17** | **March மார்ச்** | **2017**

ஆண்டு சந்தா ரூ. 120/- தனிப் பிரதி ரூ. 10/- வெளிநாட்டு சந்தா ரூ. 600/-



# அவளுடைய விலை முத்துக்களைப்பார்க்கிலும் உயர்ந்தது....

நீதி 31:10

கௌரவ ஆசிரியர் **BETTY CHOATE**    ஆசிரியர் **பிலேமோன் ராஜா**

புதிய ஏற்பாட்டு கிறிஸ்தவத்தை மீட்டமைக்கும் இதழ்

***This Month Magazine Dedicated to all Christian Women in Lord's Church***

## இதழின் உள்ளே...


| | |
|---|---|
| சாதியாத் விதவை | 3 |
| தேவன் எவ்வாறு நம் வாழ்வில்... | 6 |
| ஜெபம் - கெஞ்சும் இடம் | 7 |
| பரிசுத்தவான்களின் காணிக்கை | 8 |
| ஜீவபுத்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள் | 11 |



*In memory of J.C. CHOATE*

*Guest Editors :* **Betty Choate, Jerry & Paula Bates**

*Editor :* **PHILEMON RAJAH**

ஆசிரியர் குழு

**V. கிங்ஸ்லிராஜா,** M.S. (I.T.& M.)., M.Th.,

**Dr. V.S. இம்மானுவேல்,** M.Sc., D.D.,

**C. கியாமிலஸ் கார்த்திக்,** B.Sc.,

**R. ஆண்டனி ராஜா,** D.Th.,


## கிருபையுள்ள வார்த்தை TV நிகழ்ச்சிகள்

### நம்பிக்கை T.V. யில்

வெள்ளி காலை
**6 மணி முதல் 6-30 மணி**

செய்தியாளர்

போதகர். **பிலேமோன்ராஜா,** M.A., M.Th.,
(Director - J.C. School of Evangelism)


### தமிழன் T.V. யில்

ஞாயிறு காலை 6-45 மணி

செய்தியாளர்


சகோ. **கிங்ஸ்லி ராஜா,** M.Th.,
(இணை ஆசிரியர் - கிருபையுள்ள வார்த்தை)

**கிருபையுள்ள வார்த்தை நிகழ்ச்சியினை காணத்தவறாதீர்.**











**Advanced Bible Correspondence Courses Available in English.**

For Details:
**CHOATE BIBLE CORRESPONDENCE COURSE INSTITUTE**
P.O.Box 15, Arasaradi,
Madurai - 625 016. Tamilnadu

**கிருபையுள்ள வார்த்தை**

**திக்கற்றோரை தேற்றும் தேவ வார்த்தை**

**World Literature Publication**
Post Box No. 15, Arasaradi, Madurai 625 016. India




**Send Postal Expenses only and receive The Voice of Truth Intl. Vol. 91**

ஆசிரியர் உரை

# சாறிபாத் விதவை

P.C. பிலேமோன் ராஜா



அன்பான கிருபையுள்ள வார்த்தை வாசகர்கள் அனைவருக்கும், சிறப்பாக வாசகிகள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் திருப்பெயரால் பெண்கள் தின (மார்ச் 8) வாழ்த்துக்களையும் எனது ஜெபங்களையும் தெரிவித்துக்கொள்கிறேன். இந்த மாதம், சாறிபாத் என்னும் ஊரில் வாழ்ந்த விதவையிடமிருந்து ஆவிக்குரிய காரியங்களை கற்றுக்கொள்ள நம் மனதை நாம் ஆயத்தப்படுத்துவோம்.

"சாறிபாத்" என்னும் ஊருக்கு "சரெப்தா" என்னும் வேறு பெயரும் உண்டு. இவளது பெயர் வேதாகமத்தில் சொல்லப்படவில்லை. அவளுக்கு ஒரு குமாரன் மாத்திரம் இருந்ததாக சொல்லப்பட்டுள்ளது. ஆண்டவருடைய பிரசங்கத்தில் இந்த விதவையும் இடம் பிடித்ததால், இந்த விதவை எவ்வளவு சிறப்பு வாய்ந்தவள் என்பதை நாம் அறிய முடியும். **லூக் 4:26** ஆயினும் எலியா, சீதோன் நாட்டிலுள்ள சரெப்தா ஊரிலிருந்த ஒரு விதவையினிடத்திற்கு அனுப்பப்பட்டானேயல்லாமல் மற்றொருத்தியினிடத்திற்கும் அனுப்பப்படவில்லை.

நம்முடைய தேவன், விதவைகளை குறித்து மிகவும் அக்கரையுள்ளவர் என்பதை நாம் மனதில் கொள்வோம். **யாக் 1:27** திக்கற்ற பிள்ளைகளும் விதவைகளும் படுகிற உபத்திரவத்திலே அவர்களை விசாரிக்கிறதும், உலகத்தால் கறைபடாதபடிக்குத் தன்னைக் காத்துக்கொள்ளுகிறதுமே பிதாவாகிய தேவனுக்கு முன்பாக மாசில்லாத சுத்தமான பக்தியாயிருக்கிறது.

## 1. இவள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவள்

எலியாவை சில நாட்கள் போஷிக்கும்படி இவள் தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டாள். **1 ராஜா 17:9** அதற்கு அவர்கள்: தங்கள் பிதாக்களை எகிப்து தேசத்திலிருந்து புறப்படப்பண்ணின தங்கள் தேவனாகிய கர்த்தரைவிட்டு, வேறே தேவர்களைப் பற்றிக்கொண்டு, அவர்களை நமஸ்கரித்துச் சேவித்தபடியினால், கர்த்தர் இந்தத் தீங்கையெல்லாம் அவர்கள்மேல் வரப்பண்ணினார் என்று சொல்லுவார்கள் என்றார்.

நாம் ஒவ்வொருவருமே ஒரு நோக்கத்திற்காக தேவனால் தேர்ந்தெடுக்கப்பட்டவர்கள். **ரோமர் 8:30** எவர்களை முன்குறித்தாரோ அவர்களை அழைத்துமிருக்கிறார். எவர்களை அழைத்தாரோ அவர்களை நீதிமான்களாக்கியுமிருக்கிறார். மேலும் நாம் தேவனால் பிடிக்கப்பட்டவர்கள், பிரித்தெடுக்கப்பட்டவர்கள். **பிலி 3:12** நான் அடைந்தாயிற்று, அல்லது முற்றும் தேறினவனானேன் என்று எண்ணாமல், கிறிஸ்து இயேசுவினால் நான் எதற்காகப் பிடிக்கப்பட்டேனோ அதை நான் பிடித்துக்கொள்ளும்படி ஆசையாய்த் தொடர்கிறேன். நாம் ஒரு தூய்மையான, களங்கமில்லாத நோக்கத்திற்காக அழைக்கப்பட்டவர்கள். **1 யோவான் 2:25** நித்தியஜீவனை அளிப்பேன் என்பதே அவர் நமக்குச் செய்த வாக்குத்தத்தம்.

## 2. அவள் தேவனுடைய கைகளில் தன்னை வெள்ளை காகிதமாக ஒப்படைத்தாள்.

தேவனுடைய அழைப்பை ஏற்று அவர் பின்னே வருகிற நம்மிடம் தேவன் எதிர்பார்ப்பது இந்த குணத்தை தான். அவள் தன்னை முழுவதுமாக தேவ சித்தத்திற்கு ஒப்புக்கொடுத்தாள். அந்த ஒப்புக்கொடுத்தலில் நிலை நிற்கவும் செய்தாள். **1ராஜா 17:13** அப்பொழுது எலியா அவளைப் பார்த்து: பயப்படாதே, நீ போய் உன் வார்த்தையின்படி ஆயத்தப்படுத்து, ஆனாலும் முதல் அதிலே எனக்கு ஒரு சிறிய அடையைப் பண்ணி என்னிடத்தில் கொண்டுவா, பின்பு உனக்கும் உன் குமாரனுக்கும் பண்ணலாம்.

செய் என்றார், செய்து நின்றாள் ! **1 ராஜா 17: 15** அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள், அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள். தேவன் அவர் விருப்பப்படி நம்மை பயன்படுத்துவதற்கும், நாம் விரும்புகிறபடி தேவனுக்கு பயனுள்ளவர்களாக இருப்பதற்கும் வித்தியாசம் உண்டு. நம்மை தேவன் அவருடைய சித்தத்தின்படியும், பயன்படுத்துவார், நம்முடைய விருப்பத்தின்படியும் அனுமதிப்பார். நம்மை எப்படி பயன்படுத்த வேண்டும் என்ற கோரிக்கைகளுடன் தேவனிடம் நெருங்க வேண்டாம். நம்மை அவர் சித்தப்படி பயன்படுத்த அவருக்கு முழு உரிமையும் இருக்கிறது அல்லவா ?

**ஏசா 64:8** இப்பொழுதும் கர்த்தாவே, நீர் எங்களுடைய பிதா, நாங்கள் களிமண்; நீர் எங்களை உருவாக்குகிறவர், நாங்கள் அனைவரும் உமது கரத்தின் கிரியை. நாம் தேவனுடைய கைகளில் வெள்ளை காகிதமா? வேண்டுகோள் காகிதமா? சிந்திப்போம்!

## 3. தேவன், தனது நிலையை விட பெரியவர் என அறிந்திருந்தாள்.

இங்கே சூழ்நிலைக்கு அவள் கட்டுப்படாமல், சூழ்நிலையை கட்டுப்படுத்தினாள். மீறினாள், தோற்கடித்தாள். அவள் நிலை என்பது வறுமை, தேசத்திலே பஞ்சம், சரீரத்திலே பசி, நாளை என்பது

மரணமாக இருந்தது. **1 ராஜா 17:12** அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

தனது நிலையிலிருந்து தேவனை அதிகம் நேசித்தாள், மற்றும் விசுவாசித்தாள். தன்னுடைய காலங்கள் கர்த்தருடைய கரங்களில் இருக்கிறது என்பதை உணர்ந்திருந்தாள். **சங் 31:15** என் காலங்கள் உமது கரத்திலிருக்கிறது; என் சத்துருக்களின் கைக்கும் என்னைத் துன்பப்படுத்துகிறவர்களின் கைக்கும் என்னைத் தப்புவியும்.

சூழ்நிலை எல்லாம் சாதகமாக அமையும் பொழுது கர்த்தருக்கு கீழ்படிவது என்பது, உண்மையான கீழ்படிதலாகவோ, அன்பாகவோ, நாம் தேவனை சார்ந்தவர்கள் என்பதாகவோ இருக்க முடியாது. அவைகள் நமக்கு எதிரே அணியணியாய் வந்தாலும் நாம் தேவனுக்கு தொடர்ந்து கீழ்படியும் பொழுதுதான், நாம் முற்றிலும் தேவனை சார்ந்தவர்கள் என்பதையும், தேவனை உண்மையாகவே நேசிக்கிறோம் என்பதையும் வெளிப்படுத்துகிறோம்.

ஆபிகாம் தேவனை விசுவாசித்தான். எப்பொழுது? அவனும் அவன் மனைவியும் குழுந்தை பெற்றெடுக்க தகுதியற்ற சூழ்நிலையில். **ரோமர் 4:19–21** அவன் விசுவாசத்திலே பலவீனமாயிருக்கவில்லை; அவன் ஏறக்குறைய நூறுவயதுள்ளவனாயிருக்கும்போது, தன் சரீரம் செத்துப்போனதையும், சாராளுடைய கர்ப்பம் செத்துப்போனதையும் எண்ணாதிருந்தான். தேவனுடைய வாக்குத்தத்தத்தைக்குறித்து அவன் அவிசுவாசமாய்ச் சந்தேகப்படாமல், தேவன் வாக்குத்தத்தம் பண்ணினதை நிறைவேற்ற வல்லவராயிருக்கிறாரென்று முழு நிச்சயமாய் நம்பி, தேவனை மகிமைப்படுத்தி, விசுவாசத்தில் வல்லவனானான். இவள் அல்லவோ ஆபிரகாமின் குமாரத்தி ! நம் வாழ்வில் இயேசு மட்டுமே பெரியவரா? அல்லது பெரியவர்களில் இயேசுவும் ஒருவரா ?

## 4. அவள் தன் ஜீவனை விட தேவனை நேசித்தாள்.

**1 ராஜா 17:12** அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல், என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள்.

அவளிடம் இருந்த அந்த ஒரு கை மாவு தான் அவளுக்கும் மற்றும் அவளுடைய மகனுக்கும் ஜீவன். ஆயினும் அதையும் அவள் இழக்க தயாரானாள். தேவ சத்தம் அவள் காதில் கேளாதவரை, அந்த மாவை தனக்கு ஜீவனாக எண்ணினாள். அது தேவனுக்கு தேவை என்று கேட்டவுடன் அதை இழக்க துணிந்தாள். இயேசுவுக்கு உயிரையே கொடுப்பேன் என்பதனை, இவள் இங்கே செயல் விளக்கப்படுத்தினாள்.

நாமும் இயேசுவுக்கு உயிரையே கொடுப்பேன் என்று கூறுகிறோம். ஆனால் அதை செயல்விளக்கப்படுத்த தவறுகிறோம். ஏனெனில் நம்மில் ஜீவனை கொடுக்க துணிந்தவர்கள் எத்தனையோ பேர், தங்கள் நேரத்தையோ, சரீர அசௌகரியத்தையோ கொடுக்க தவறுகிறோம். மேலும் அந்த தவறை தொடர்ந்து செய்ய நமக்கு நாமே நியாயமான காரியங்களை சேகரிக்கிறோம். **எபி 12:4** பாவத்திற்கு விரோதமாய்ப் போராடுகிறதில் இரத்தஞ்சிந்தப்படத்தக்கதாக நீங்கள் இன்னும் எதிர்த்து நிற்கவில்லையே!



சாத்தானுக்கு எதிரான இந்த போராட்டத்தில் போராட ஆயத்தமா? அப்படியானால், இந்த விதவை போலவும் மற்றும் பவுலை போலவும், வைராக்கியம் பற்றி எறிய வேண்டும். **அப் 21:13** அதற்குப் பவுல்: நீங்கள் அழுது என் இருதயத்தை ஏன் உடைந்து போகப்பண்ணுகிறீர்கள்? எருசலேமில் நான் கர்த்தராகிய இயேசுவின் நாமத்திற்காகக் கட்டப்படுவதற்கு மாத்திரமல்ல, மரிப்பதற்கும் ஆயத்தமாயிருக்கிறேன் என்றான். கட்டப்படுவதற்கு மட்டுமல்ல மரிக்கவும் ஆயத்தம் என்றார் பவுல். நாமும் ஆயத்தம் என்றால், யோபுவை போல வாதிக்கப்படலாம், தானியேலை போல சிங்கக் கெபியிலே போடப்படலாம், ஸ்தேவானைப் போல கல்லெறியப்படலாம்.

**மத் 10:39** தன் ஜீவனைக் காக்கிறவன் அதை இழந்துபோவான், என்னிமித்தம் தன் ஜீவனை இழந்துபோகிறவன் அதைக் காப்பான். உயிரே போனாலும் பரவாயில்லை, ''இயேசு தான் உயிர்'' என்பதாக நம் வாழ்வு இருக்கிறதா? இயேசுவை நம் வாழ்வை விட அதிகமாக நேசிக்கிறோமா? நம் வாழ்வை, இயேசுவை விட அதிகம் நேசிக்கிறோமா?

## 5. ''தேவன் தான் எனக்கு எல்லாம்'' என நிரூபித்தாள்

**1 ராஜா 17:12,15** அதற்கு அவள்: பானையில் ஒரு பிடிமாவும் கலயத்தில் கொஞ்சம் எண்ணெயுமே அல்லாமல்,

என்னிடத்தில் ஒரு அடையும் இல்லையென்று உம்முடைய தேவனாகிய கர்த்தருடைய ஜீவனைக்கொண்டு சொல்லுகிறேன்; இதோ, நானும் என் குமாரனும் சாப்பிட்டுச் செத்துப்போக, அதை எனக்கும் அவனுக்கும் ஆயத்தப்படுத்துகிறதற்கு இரண்டு விறகு பொறுக்குகிறேன் என்றாள். 15 அவள் போய், எலியாவின் சொற்படி செய்தாள். அவளும், இவனும், அவள் வீட்டாரும் அநேகநாள் சாப்பிட்டார்கள்.

அவள் அந்த அப்பத்தை கொடுப்பதால், தான் மட்டுமல்ல தனது மகனும் மரிக்க வேண்டியதாயிருக்கும்; அதற்கும் அவள் துணிந்தாள். நம்மில் அநேகர் கிறிஸ்துவிற்காக நாம் கஷ்டப்பட ஆயத்தமாயிருப்போம். ஆனால் நம்மை சார்ந்தவர்கள் கஷ்டப்படுவதை தாங்கக் கூடாதவர்களாயிருப்போம். அப்படி நாம் செய்யும்பொழுது, இயேசுவை விட "நம் உறவு தான் எல்லாம்'' என்று வாயினால் சொல்லாமல், செயலினால் சொல்கிறவர்களாயிருப்போம்.

முதலாம் நூற்றாண்டு விசுவாசிகள், நீரோ ராயன், ஆண்டியோகஸ், எபிபேனஸ் மற்றும் டொமிசியன் போன்ற பேரரசர்களின் காலத்தில் தங்களை மட்டுமல்ல, தங்களை சார்ந்தவர்களையும் அல்லவா இழந்தார்கள். இந்தியாவில் வந்து ஊழியம் செய்த மிஷனரிமார்களை நினைத்து பாருங்கள். தன்னை மட்டுமல்ல தங்கள் இனிய குடும்பத்தையுமே இழந்தார்கள்.

கர்த்தர் அனுமதிக்கிற இன்பத்தை மட்டுமல்ல, கர்த்தர் நிமித்தம் வருகிற துன்பத்திற்கும் யோபு, தன்னையும், தன் வீட்டாரையும், தன்னுடைய யாவையும் இழந்தாரல்லவா? **யோபு 2:10** அதற்கு அவன்: நீ பயித்தியக்காரி பேசுகிறது போலப் பேசுகிறாய்: தேவன் கையிலே நன்மையைப் பெற்ற நாம் தீமையையும் பெறவேண்டாமோ என்றான். இவைகள் எல்லாவற்றிலும் யோபு தன் உதடுகளினால் பாவஞ்செய்யவில்லை.

நம் வாழ்வில் எது முன்னுரிமை கொண்டுள்ளது? பணமா ? வேலையா ? உறவா? உலகமா ? நம்முடைய வாழ்வில் இயேசுவே எல்லாமுமாக இருக்கிறாரா? அல்லது இருக்கிற எல்லாவற்றிலும் அவரையும் ஒருவராக வைத்திருக்கிறோமா? சிந்திப்போம்!

மனம் மாற்றம் அடைவோம் ! தேவ ஆசீர் பெறுவோம்!

பொதுவான செய்திகள்

## பண்டிதை ரமாபாய் — Pandita Ramabai (1858 - 1922)

- பண்டிதை ரமாபாய் (23 ஏப்ரல் 1858 -05 ஏப்ரல் 1922), ஒரு பெண்ணுரிமைப் போராளியாகவும், சமூக சீர்திருத்தவாதியாகவும் விளங்கிய பெண்மணி ஆவார்.
- பிராமணக் குடும்பத்தில் பிறந்து, பின்னர் கிறித்தவ மதத்துக்கு மாறிய சமூக சீர்திருத்தவாதி ஆவார்.
- குழந்தைத் திருமணங்களை எதிர்த்துப் பரப்புரை செய்தவர். விதவை மறுமணம் உள்ளிட்ட பெண்களின் உரிமைகளுக்காகப் போராடியவர்.
- விதவைகள், ஆதரவற்ற பெண்கள் ஆகியோரின் வாழ்வு நலனுக்காகப் பல அமைப்புகளை உருவாக்கியவர். கல்கத்தாவிலிருந்து பூனாவுக்குச் சென்றார். அங்கு ஆரிய மகிளா சமாஜ் என்னும் அமைப்பைத் தொடங்கினார். பெண் கல்வி பரவவும், குழந்தைத் திருமணம் ஒழியவும் அவ்வமைப்பு பாடுபட்டது.
- 1889 இல் இந்தியா திரும்பியதும் விதவைகளுக்காக 'சாரதா சதன்' என்னும் அமைப்பை மும்பையில் உருவாக்கினார்.
- கிறித்தவ மதப் பிரச்சாரத்தை முடுக்கி விட்டார். இதனால் ரமாபாய்க்கு எதிர்ப்புக் கிளம்பியது. பைபிளை மராத்தி மொழியில் மொழிபெயர்க்கும் பணியில் ஈடுபட்டார்.
- 1986-97 ஆண்டுகளிலும், 1900-01 ஆண்டுகளிலும் மத்திய பிரதேசத்திலும், குசராத்திலும் கடும் பஞ்சம் நிலவியது. பசியால் வாடிய 2000 பெண்களையும் குழந்தைகளையும் ஒரு பண்ணையில் தங்க வைத்துக் காப்பாற்றினார்.
- "முக்தி சதன்" "பிரீதி சதன்" "சாந்தி சதன்" ஆகியன ரமாபாய் உருவாக்கிய பெண்களுக்கான தொண்டு நிறுவனங்கள் ஆகும்.

***"A life committed to Christ has Nothing to Fear, Nothing to Loose, Nothing to regret"***

***- Pandita Ramabai***

# தேவன் எவ்வாறு நம் வாழ்வில் செயல்படுகிறார் ?

## How does God work in our lives?



Betty Choate

நாம் வாழும் இந்த உலகம், தீமையினால் நிறைந்ததும் ஆபத்துள்ளதுமான இடம் என்பதை உணராமல், நம்முடைய வாழ்வில் நடக்கும் பிரச்சனைகள் மற்றும் விபரீதங்களை நம்மால் கணிக்க முடியாது. பரிதாபமான நிலை என்னவென்றால், ஏதோ ஒரு அசம்பாவிதம் நடந்தவுடன் கேட்கப்படும் முதல் கேள்வியே, "தேவன் (கடவுள்), ஏன் இதை செய்தார்?" என்பதே!

என்றாலும், இந்த எதார்த்தமான கேள்வி எந்த உண்மையின் அடிப்படையில் எழுகின்றதெனில், மனிதர்கள் அனைவரும், தேவனை, எல்லா வல்லமையும் உள்ளவர் என்றும், அண்டம் முழுவதையும் காப்பாற்றுபவர் என்றும் அறிந்துள்ளனர். ஆகையினால், எது நடந்தாலும் அதின் பாராட்டோ, கண்டனமோ அவர் மீதே வைக்கப்படுகின்றது.

நாம் ஏதேன் தோட்டத்தை மறந்துவிட்டோமா? மனிதனுக்கு அங்கு அவர் கொடுத்த பரிசு நியாபகம் உள்ளதா? தேர்ந்தெடுக்க, அன்பு கூற மற்றும் கீழ்படியவோ கீழ்படியாமலிருக்கவோ அவர் கொடுத்த சுதந்திரம் பற்றி நினைவுள்ளதா? மனிதன் தான், தன்னுடைய தேர்வினால் பாவத்தை இவ்வுலகிற்கு கொண்டு வந்தான் என்பதை மறந்துவிட்டோமா? இவ்வுலகில் தீமைக்கு காரணம் தேவன் இல்லை. இல்லவே இல்லை! அப்படியானால், அதின் காரணம் என்ன?

இவ்வுலகில், அநேக இயற்கை பேரழிவுகள் நடக்கின்றன. ஒருவேளை சாத்தான், அசாதாரணமான வல்லமையினால் அல்ல, இயற்கையான காரியங்களின் மூலம், சில குறிப்பிட்ட பேரழிவுகளை உண்டுபண்ணுகிறான். அல்லது, பாவம் இவ்வுலகில் பிரவேசித்ததினால் ஆரம்பத்தில் உண்டான இயற்கை விதிகள் தூக்கி எறியப்பட்டதினாலேயோ, இப்படி நேரடியாகவோ மறைமுகமாகவோ நாம் எல்லா பிரச்சனைகளையும் சாத்தான் உண்டுபண்ணுகிறான் எனலாம். அவன் தேவனுக்கும் எதிரி, மனிதனுக்கும் எதிரி; மேலும் அவனுடைய குறிக்கோள் நம்மை அழிப்பதே ஆகும்.



மற்ற பேரழிவுகளில் அநேகமானவை, நேரடியாகவே பாவத்தினால் உண்டாகின்றது: அதாவது, ஒரு கூட்டத்தார் மற்றவர்களை அழித்துப்போடுவது, மற்றும் சாராயமும் ( மது ) போதையும் வன்முறை மற்றும் மரணத்தை கொண்டுவருவது போன்றவை கொடிய பாவத்தின் பேரழிவுகள். இவை அனைத்தும், பாவத்தின் விளைவினால் தலைகீழாக மாறிவரும் உலகில் தினமும் நடக்கின்றது.

சில பேரழிவுகளுக்கு காரணம், நம்முடைய தீமையான முடிவுகளால் நாம் நம்மீதே வருவித்துக் கொள்வது ஆகும். பொய் கூறுவது, திருடுவது, பாலின ஒழுக்கக்கேடுகள், நம் சரீரத்தை சீரழிப்பது, கோபம், வெறுப்பு, இப்படி இந்த பட்டியல் நீண்டு கொண்டே செல்கிறது...

மனிதனால் இவ்வுலகில் உண்டான குழப்பங்களை ( மாற்றங்களை ) தேவனால் நம்மை சிந்தனையற்றவராக்கி தடுக்க முடியாது; ஏனென்றால், அவர் நம்முடைய சுய விருப்பச் செயல்களை அவர் அனுமதிக்க வேண்டும். இந்தப் பிரச்சனைக்கான அவருடைய தீர்வு என்னவெனில், தன்னுடைய வாக்குத்தத்தின்படி தன் பிள்ளைகளை, பாவத்தினால் சபிக்கப்பட்ட உலகைவிட்டு எடுத்து, நமக்காக ஆயத்தம் செய்யப்பட்டுள்ள வீட்டிற்கு கூட்டிச் செல்வதே ஆகும்.

ஆனால், தற்சமயம் நாம் இவ்வுலகில் வாழும் காலத்திற்காகவும் அவர் தம்முடைய பிள்ளைகளுக்காக வாக்குத்தத்தம் செய்துள்ளார்; அதாவது, அவரிடம் அன்புகூர்ந்து கீழ்படிபவர்களுக்கு அவர், எல்லாவற்றையும் நன்மைக்கேதுவாக மாற்றித் தருவார் : அன்றியும், அவருடைய தீர்மானத்தின்படி அழைக்கப்பட்டவர்களாய்த்தேவனிடத்தில் அன்புகூருகிறவர்களுக்குச் சகலமும் நன்மைக்கு ஏதுவாக நடக்கிறதென்று அறிந்திருக்கிறோம் (ரோமர் 8:28).

அப்படியானால், யோபு 1:10 ல் சாத்தான் கூறுவதுபோல், நாம் தேவனால் ஒரு பாதுகாப்பு அரணினால் காக்கப்பட்டுள்ளோமோ? நீர் அவனையும் அவன் வீட்டையும் அவனுக்கு உண்டான எல்லாவற்றையும் சுற்றி வேலியடைக்கவில்லையோ? அவன் கைகளின் கிரியையை ஆசீர்வதித்தீர்; அவனுடைய சம்பத்து தேசத்தில் பெருகிற்று.

தொடரும் ...

| பிப்ரவரி மாத சிறுவர் பதில் எழுதியவர்கள் |
| --- |
| 1. I. ஷீபா பிரியதர்ஷினி – சிவகங்கை |
| 2. A. கெனித் சாம் – மதுரை |
| 3. R. சிட்டு தேவி – செங்கல்பட்டு |

# ஜெபம் – கெஞ்சும் இடம்

## PRAYER - THE BEGGING PLACE

Paula Bates



ஜெபத்திற்கு இன்னொரு பெயர், "கெஞ்சும் இடம்''. நம்முடைய வாழ்வானது பிரச்சனைகளினாலும், பாவங்களினாலும், சாத்தானுடைய சோதனைகளினாலும், நம்முடைய குடும்பத்தார் மற்றும் நண்பர்களின் துரோகங்களினாலும் நிறைந்துள்ளது. ஆகையினால் நாம், தேவனிடம் தாழ்மையுடன் வருவதற்கான குறிப்பிட்ட காரணம் உண்டு.

### பழைய ஏற்பாட்டின் உதாரணங்கள் :

எஸ்தர் ராணியாக இருந்தாலும் கூட, யூதர்கள் கொல்லப்படுவார்கள் என்று அறிந்தபோது, மூன்று நாட்கள் தேவனிடம் உபவாசம் இருந்து ஜெபித்தாள். 1 சாமுவேல் முதலாம் அதிகாரம் 10 ம் வசனத்தில், பிள்ளையில்லாதிருந்த அன்னாளைப் பற்றி நாம் பார்க்கையில், அவன் அழுது தேவனிடம் ஜெபித்ததைப் பார்க்கின்றோம்.



அன்பு என்பது மிகவும் பெரியதுதான்; ஆனாலும் சில நேரங்களில், தேவனுடைய அன்பு மட்டுமே நம்முடைய காயங்களுக்கு மருந்து போட முடியும். அன்னாள் ஒரு ''ஜெப வீராங்கனை'', வாசியுங்கள் **1 சாமு 2:1–10.** இந்த ஜெபத்தில் அவள் தன்னுடைய தேவையை மட்டும் குறிப்பிடாமல், தேவனுக்கு நன்றி செலுத்துகிறாள்; மேலும் அவரை மகிமைப்படுத்தி, அவரை அவருடைய சரியான ஸ்தானத்தில் வைக்கிறாள். அன்னானளப் போன்ற விசுவாசம் நமக்கு உண்டா? பாருங்கள், அவளுக்கு பிள்ளை பிறக்கும் என்று ஜெபத்திற்கு பின் தேவன் கூறியவுடன், முழுமையாக அதை நம்பினவளாய் தன் வீட்டிற்கு சென்றாள். மேலும் அதன் பின் கவலைப்படவோ, துக்கமாக இருக்கவோ இல்லை. பாருங்கள், ஜெபம் செய்யும் வழிமுறைக்கும் (தாழ்மையுடன் கெஞ்சுதல்), அதன்பின் இருக்க வேண்டிய மனோநிலைக்கும், அன்னாள் நமக்கு ஒரு சிறந்த முன்மாதிரி.

சகோதரியே! நீங்கள் ஜெபித்த பிறகும் இன்னும் கவலைப்படுகிறீர்களா? நம்முடைய ஜெபத்திற்கான தேவனுடைய பதிலை நாம் ஏற்றுக்கொள்கிறோமா ? அது எப்படிப்பட்ட பதிலாக இருந்தாலும் தேவனை முழுமையாக நம்பி அதை ஏற்கிறோமா ? சிந்தியுங்கள்!

**எபிரெயர் 4:16** ஆதலால், நாம் இரக்கத்தைப் பெறவும், ஏற்ற சமயத்தில் சகாயஞ்செய்யுங்கிருபையை அடையவும், தைரியமாய்க் கிருபாசனத்தண்டையிலே சேரக்கடவோம்.

நம்முடைய வாழ்வில் சந்தோஷமாக இருப்பினும், துக்கமாக இருப்பினும், பிரச்சனைகளாக இருப்பினும், அங்கு தேவனை ஒரு பகுதியாக நாம் வைத்துக்கொள்ள வேண்டும். நமக்கு என்ன தேவை என்றும், நாம் என்ன கேட்கப்போகிறோம் என்றும் அவருக்கு நன்றாக தெரியும்; ஆனால் நாம் நம்முடைய எண்ணங்களினாலும் வார்த்தைகளினாலும் அவரிடமாக வரவேண்டும் என விரும்புகிறார்.

லூக்கா 18ல், தேவனுக்கு பயப்படாத நியாதிபதியைப் பற்றியும், அவனிடமாக கெஞ்சிய பெண்ணைப்பற்றியும் வாசிக்கின்றோம். அவள் தொடர்ந்து கேட்டபடியினால் கேட்டதை பெறுகிறாள். ஆனால் நம் தேவனோ, நீதியும் இரக்கமுள்ளவர்; அதினால் அவருடைய பிள்ளைகள் தொடர்ந்து இரைஞ்சி கேட்கும்போது அவர் நிச்சயம் அருளிச்செய்வார்; நம் ஜெபங்களினால் அவர் சோர்வடைவதில்லை.

மேலும், நாம் ஜெபத்திலே, தேவனை நம்புகின்றோம். மனோரீதியாக நாம் நம்மை, அவருடைய சித்தத்திற்கு நம் வாழ்வை ஒப்புக்கொடுக்கின்றோம். தேவன் நம் ஜெபங்களுக்கு பதிலளிப்பதினால், நாம் அவருடைய இரக்கங்களுக்காக நன்றி கூறுகின்றோம் **(சங் 4:1–8).**

நிச்சயமாகவே தேவன், நீதிமானின் ஜெபத்தை கேட்கிறார் **(சங் 34:15–18).**

### சென்ற மாதம் பெயர் விடுபட்டவர்கள்

1. M. வின்சென்ட் – கோவை
2. Mrs. A. சந்திரா – மதுரை
3. R. சிட்டு தேவி – செங்கல்பட்டு
4. செல்லத்தாய் சுவாமி – மதுரை
5. Mrs. இந்திரா சரோஜினிபாய் – பாளையங்கோட்டை

# பாடம் : 6 பரிசுத்தவான்களின் காணிக்கை அல்லது கொடுத்தல்

Jerry Bates



கொடுத்தல் அல்லது காணிக்கை செலுத்துதல் என்பது கிறிஸ்தவனுக்கு ஒரு முக்கியமான ஆசிர்வாதமும், கொடுக்கப்பட்ட கடமையுமாகும். மாற்கு 12:41-44 ல் மனுஷர்கள் கொடுக்க வேண்டியதறகான மாபெரும் உதாரணமாக இருப்பதை நாம் காணலாம். தேவாலயத்து பொக்கிஷப் பெட்டிக்குள் ஜனங்கள் காணிக்கை போடுவதை இயேசு கவனித்துக் கொண்டிருந்தார். ஒரு விதவை ஏழைப் பெண் இரண்டு காசுகளை காணிக்கையாகச் செலுத்தினாள். அந்த நேரத்தில் அது மிக அற்பமாகக் கருதப்பட்டு புழக்கத்திலிருந்த பணம். இன்றைக்கு உள்ள பணத்துடன் ஒப்பிட்டால் அது வேறுபட்ட மதிப்பைத் தரும்; ஆகிலும் இது ஏறத்தாழ ஒன்றுமில்லை எனலாம். இருந்தும், இந்த விதவைதான் மற்றெல்லாரையும் காட்டிலும் அதிகமாக கொடுத்தாள் என்று இயேசு சொன்னார், ஏனெனில் இவர்கள் எல்லோரும் தங்கள் பரிபூரணத்தலிருந்து போட்டார்கள், இவளோ தனக்கிருந்த எல்லாவற்றையும் போட்டு விட்டாள்.

## கொடுப்பதற்கான மனப்பாங்கு

மனப்பாங்கு எப்பொழுதமே தேவனுக்கு மிகவும் முக்கியமானது. முதலாவதாக கொடுப்பதில் இருக்கிற சில தவறான மனப்பான்மைக் காண்போம். நாம் வெறும் கடமைக்காக மட்டும் கொடுக்கிற மனப்பான்மையுள்ளவர்களாக இருத்தல் கூடாது; அல்லது பெருமைக்காகவோ, மனுஷருடைய புகழுக்காகவோ, நமது தனிப்பட்ட முறையில் உட்படுத்திக் கொள்ளுதலைக் குறித்த மன உறுத்துதலிலிருந்து விடுபடவோ கொடுக்கக் கூடாது. ஏதோ கொஞ்சம் பணத்தைக் கொடுப்பது, ஒருவர் தனக்கானவைகளை செய்து கொள்வதிலுள்ள வேதனைகளை, தேவனுக்கு ஊழியஞ் செய்யும்படி இன்னொருவரை ஒருவர் நியமிக்க இயலாது.

கொடுத்தல் என்பது விசுவாசத்தின் பிரதான செயல்; இது கிறிஸ்தவனின் பகுதியில் தேவனிடத்தில் அன்பு கூருவதும், அவருக்குச் செலுத்தும் வழிபாடுமாகும். நம்முடைய கொடுத்தல் மூலம் தேவனிடத்தில் நாம் கொண்டுள்ள அன்பை நிரூபிக்கிறோம். நாம் கொடுப்பதன் மூலம், நாம் வளருகிறோம், நாம் தரும சிந்தையுள்ளவர்களாயிருப்பதன் மூலம் தெய்வீக சுபாவத்திற்கு பங்குள்ளவர்களாயிருக்கிறோம். மேலும் நாம் கொடுப்பதினால் தேவனுடைய ஆசிர்வாதத்திற்கான வழி நமக்குத் திறக்கப்படுகிறது. இறுதியாக, தேவனுடைய சபையாகிய ராஜ்யத்தின் வளர்ச்சிக்காக நாம் கொடுக்கிறோம். சபையின் பல்வேறுபட்ட தேவைகளை சந்திப்பதற்காகவும், ராஜ்யத்திற்கு ஆதாரமாயிருக்கும்படியாகவும் தேவன் தம்முடைய பிள்ளைகளுக்கு வைத்திருக்கிற திட்டம் இது.

**1 கொரிந்தியர் 16:1–2**

“பரிசுத்தவான்களுக்காகச் சேர்க்கப்படும் தர்மப் பணத்தைக் குறித்து நான் கலாத்தியா நாட்டுச் சபைகளுக்கு பண்ணிய திட்டத்தின் படியே நீங்களும் செய்யுங்கள். நான் வந்திருக்கும் போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு, உங்களில் அவனவன் வாரத்தின் முதல் நாள் தோறும், தன் தன் வரவுக்குத் தக்கதாக எதையாகிலும் தன்னிடத்தில் சேர்த்து வைக்கக் கடவன்”

இந்த வசனங்களில் நாம் கொடுக்கும்படிக்கு நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாக, அல்லது சேர்த்து வைக்கும்படியாக நமக்குக் கொடுக்கப்பட்ட கட்டளையாகக் காணுகிறோம். சபை கூடிவருகிற வாரத்தின் முதல் நாளிலே நாம் கொடுக்கும்படி கட்டளையிடப்பட்டிருப்பதால், எதையாகிலும் சேர்த்து வைக்குதல் என்பது வீட்டிலே அல்ல, சபையிலே என்று குறிப்பிடப்படுகிறது. சேர்த்து வைக்குதல் வீட்டிலே நடக்க வேண்டிய செயலாக இருக்குமேயானால், அது எப்பொழுது வேண்டுமானாலும் செய்யலாம்; ஒருவர் சபையிலே கூடிவரும் போதல்ல.

- இது தனிப்பட்ட கட்டளை. ஒவ்வொரு வரும் பங்குபெற வேண்டும்; மாறாக பணக்காரர்களோ, வயதானவர்களோ, கொஞ்சம் கடனுள்ளவர்களோ மட்டும் அல்ல.
- நாம் எதையாகிலும் சேர்த்து வைக்க வேண்டும். பெரும்பாலும் இது பணத்தைக் குறித்து மட்டுமே பேசுவதாக நாம் நினைக்கிறோம். ஆனால் இது வேறு சிலவற்றையும் உள்ளடக்கியது. அது ஒருவர் எதை உடையவராக இருக்கிறாரோ

அதைப் பொறுத்தே கொடுக்க வேண்டும். ஒருவரிடம் கொஞ்சம் பணம் மட்டுமே இருப்பதால், அவர் கொடுக்க இயலாது என்று பொருளல்ல.

- நாம் அவரவர் வரவுக்குத்தக்கதாகக் கொடுக்க வேண்டும். தேவன் ஒரு குறிப்பிட்டத் தொகையை நாம் கொடுக்க வேண்டும் என்று நியமம் செய்யவில்லை. யூதர்கள் பத்தில் ஒரு பங்கு(தசமபாகம்) செலுத்தும்படி கட்டளையிடப்பட்டனர். ஆனால் அவர்கள் செலுத்தின பலிகளும் வேறு பொருட்களும், உண்மையில் அதற்கு மேல் இருந்திருக்கக் கூடும். மேலான பிரமாணத்தைக் கொடுத்த மேலான இரட்சகருக்கு நாம் குறைவாகக் கொடுக்கலாமா? இதில் முக்கியமானது என்னவெனில், நம்மை நாம் வேறு யாரோடும் ஒப்பிட இயலாது. கொடுத்தல் என்பது ஒவ்வொருவருடைய தனிப்பட்ட விஷயம், எனவே நம்மைக் காட்டிலும் மிகவும் குறைவாகக் கொடுப்பவர்களோடு நம்மை ஒப்பிட்டு பார்த்து நியாயப்படுத்தக் கூடாது.

- இதில் தவிர்க்கப்பட வேண்டிய விஷயம் உண்டு. பவுல் வரும்போது பணஞ்சேர்க்குதல் இராதபடிக்கு இவர்கள் தங்களிடத்தில் எதையாகிலும் சேர்த்து வைக்கக்கடவர்கள் என்று சொல்லப்பட்டது. இது பவுல் விரைவில் அவர்களிடத்தில் வருவார் என்பதைக் குறிப்பிடுகிறது. பவுல் வரும்போது அவர்கள் தங்கள் காணிக்கைகளை ஆயத்தமாக வைத்துக் கொண்டிருக்க வேண்டியது. இதன் மூலம், தேவை ஏற்படும் போது சபையிலே காணிக்கை எடுப்பதை விடுத்து, தேவை ஏற்படுவதற்கு முன்பாகவே தேவையான பணத்தை ஆயத்தப்படுத்தி வைத்துக் கொள்ள வேண்டும் என்று காட்டப்படுகிறது.

### 2 கொரிந்தியர் 9:5–7

"ஆகையால், வாக்குத்தத்தம் பண்ணப்பட்டிருக்கிற உங்கள் தான தருமமானது லோபத்தனமாய்க் கொடுக்கப்பட்டதாயிராமல், உதாரத்துவமாய்க் கொடுக்கப்பட்டதாயிருக்கும்படியாக அதை ஆயத்தப்படுத்துகிறதற்குச் சகோதரர்களை ஏவி, உங்களிடத்தில் முன்னாக அனுப்புவது எனக்கு அவசியம் என்று காணப்பட்டது. பின்னும் நான சொல்லுகிறதென்னவெனில், சிறுக விதைக்கிறவன் சிறுக அறுப்பான். அவனவன் விசனமாயுமல்ல, கட்டாயமாயுமல்ல, தன் மனதில் நியமித்தபடியே கொடுக்கக்கடவன்; உற்சாகமாய்க் கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்."

- நாம் உற்சாகமாயும் மனவிருப்பத்தோடும் கொடுக்க வேண்டும். நாம் கொடுத்தாக வேண்டுமே என்பதற்காகக் கொடுப்போமாகில், தேவன் பிரியப்பட மாட்டார். நாம் அன்பின் சுபாவத்தோடு கொடுக்க வேண்டுமேயன்றி கட்டாயமாக அல்ல. கொடுத்தல் லோபத்தனத்தோடோ, இருதயத்தைக் கடினப்படுத்திக் கொண்டோ கட்டாயத்தின் பேரில் கொடுப்பதாக இருக்கக் கூடாது. சில சபைகளில் தங்களுடைய அங்கத்தினர்களை கட்டாயப்படுத்தி எதைளாவது அடமானம் கூட வைக்கச் செய்து பணத்தைப் பெற்றுக் கொண்டு, அடமானம் வைத்த ரசீதைக் கொடுத்து அதற்கான பணத்தை கட்ட வைப்பார்கள். இது உற்சாகமாய்க் கொடுக்கிற மனப்பாங்கை அப்புறப்படுத்தி, அவர்கள் கட்டாயமாய்க் கொடுக்கும் சூழலை ஏற்படுத்துகிறது.

- நம்முடைய இருதயத்திலே நிர்ணயித்தபடி நாம் கொடுக்க வேண்டும். நாம் தேவனுக்கு எவ்வளவு கொடுக்கப்போகிறோம் என்பதை முன்னதாகவே மனப்பூர்வமான முடிவெடுத்து கொடுக்க வேண்டும். நாம் தேவனுக்கு கொடுக்கப் போவதை தீர்மானித்து வைத்துக் கொண்டு மீதியை செலவிட வேண்டும்.

- இந்த வசனப்பகுதி, கொடுக்கக்கூடிய மன உறசாகத்தையும் கொடுக்கிறது. நாம் ஏன் கட்டாயமாக கொடுக்கக் கூடாது என்பதற்கான பிரதான காரணம், நாம் கொடுப்பதைக் காட்டிலும் அதிகமாக, தேவன் கொடுப்பதாகச் செய்துள்ள வாக்குத்தத்தம்தான். நாம் இச்சையோடே கொடுக்கக் கூடாது. அதாவது, இன்னும் அதிகமாய்ப் பெற்றுக் கொள்ளவோம் என்ற பேராசையுடன் கொடுத்தல் கூடாது; இருப்பினும், நாம் கொடுப்பதைப் பொறுத்து தேவன் கொடுப்பதாக வாக்குக் கொடுத்திருக்கிறார். சிலர், விசேஷமாக, தொலைக்காட்சியில் பிரசங்கிப்பவர்கள், கொடுப்பதன் மூலம் அதிகமாய்ப் பெற்றுக் கொள்வார்கள் என்ற ஆசையைத் தூண்டுவது

போல, அந்த வசனப்பகுதியைப் பயன்படுத்துவார்கள். அவர்கள் அப்படிப் பெற்றுக் கொள்ள ஏதுவாக, "முன்பணம்" அனுப்பி வைக்கும்படி ஊக்கப்படுத்துவார்கள். இப்படியாக, தங்களுக்குத் தேவையான எல்லாவற்றையும் விரைவில் பெற்றுக்கொள்வார்கள் என்று வாக்களிப்பார்கள். இது தவறான மனப்பான்மையை ஏற்படுத்துவதோடு, வசனத்துக்குப் புறம்பான போதனையாகவும் இருக்கிறது. 2 கொரி 9:8 ல், தேவன் நம்மை ஆசீர்வதிப்பதற்கேற்ப வேறு நற்கிரியைகளை நாம் செய்ய வேண்டும்; நம்முடைய சுக வாழ்வுக்காகவும் சந்தோஷத்திற்காகவும் அதைச் செலவிடக் கூடாது.

- கொடுத்தலின் அளவு முக்கியமானதல்ல. "ஒருவனுக்கு மனவிருப்பமிருந்தால், அவனுக்கு இல்லாததின் படியல்ல, அவனுக்கு உள்ளதின்படியே அங்கிகரிக்கப்படும்" **(2 கொரிந்தியர் 8:12).** இன்னொரு வார்த்தையில் சொன்னால், தேவன் ஒருவருடைய தர்மப்பணத்தின் அளவு எவ்வளவு என்று பார்ப்பதில்லை. நம்முடைய தர்மப்பணத்தை நாம் ஏன் பிறரோடு ஒப்பிடக் கூடாது என்பதை இது நமக்கு விளக்கமளிக்கிறது. ஒருவருடைய திராணியின் அளவைப் பொறுத்து தேவன் தீர்ப்பு செய்கிறார். மேலும் அதைத் தீர்மானிக்க தேவனால் மட்டுமே கூடும்.

### கொடுத்தலின் விளைவுகள்

கொடுத்தலில் காணும் தெளிவான விளைவுகளில் ஒன்று, சபையின் தேவைகள் பூர்த்தி செய்யப்படுகிறது. சபையின் பல வேறுபட்ட நிகழ்ச்சிகளை நடப்பிக்க, பல்வேறு விற்பனை முறைகளைச் செய்து பணத்தை சம்பாதிக்கவோ அல்லது வியாபாரம் செய்யவோ வேதாகமம் நமக்கு அதிகாரமளித்திருப்பதைக் காணமுடியாது; அல்லது இன்றைக்குக் காணுகிறபடி தொலைக்காட்சி நிகழ்ச்சிகளில், பொதுவாக நிகழ்ச்சியைக் காணும் அங்கத்தினரல்லாதவர்களிடம் காணிக்கையை கேட்டு பெறுவதும் சபையின் வேலையல்ல. சபையின் ஊழியம் அதின் அங்கத்தினர்களின் பிரயாசங்கள் மூலமாக மட்டுமே ஆதாரமளிக்கப்பட வேண்டும்.

கொடுத்தல் நன்றி செலுத்துதலையும் தேவனுக்கு மகிமையளிப்பதையும் கொண்டு வருகிறது. நாம் தேவனக்குச் செய்யும் ஊழியத்தை முழுமையாக செயல்படுத்துவதன் மூலம், அநேகர் நமது ஊழியத்திற்கான அடையாளத்தைக் கண்ணுற்று தேவனுடைய கற்பனைக்கு நாம் கீழ்ப்படிகிறோம் என்று அறிந்து தேவனக்கு மகிமையைச் செலுத்துகிறார்கள். **மத்தேயு 5:16** ல் இதைக் குறித்து இயேசு பேசுகிறார். "இவ்விதமாய் மனுஷர் உங்கள் நற்கிரியைகளைக் கண்டு, பரலோகத்திலிருக்கிற உங்கள் பிதாவை மகிமைப்படுத்தும்படி, உங்கள் வெளிச்சம் அவர்கள் முன்பாகப் பிரகாசிக்கக் கடவது," என்றார்.

கொடுத்தலினால், நாமும் சபையும் ஆவிக்குரிய வகையில் வளருகிறோம். நம்மால் கூடுமான வரை நாம் கொடுக்கும் போது, சபை தனது பணியைச் செய்ய நிதியைக் கொண்டிருக்கிறது. இதனால் அநேக இடங்களில், இழந்து போன ஆத்துமாக்களை மனமாற்றம் செய்ய வழிநடத்தச் செய்கிறது. சபைகள் ஊழியஞ் செய்வதையும், தேவன் மகிமைப் படுத்தப்படுவதையும் ஜனங்கள் கண்ணுறும்போது, நல்லது நடக்கிற சபையில் ஜனங்கள் அங்கம் வகிக்க விரும்புவார்கள்.

### கேள்விகள்

1. தேவாலய பொக்கிஷத்தில் ஏழை விதவை அளித்த காணிக்கைப் பணம் எவ்வளவு?
2. யூதர்கள் தேவனுக்கு எவ்வளவு கொடுக்கும்படி கட்டளையிடப் பட்டார்கள்?
3. தன் மனதில் நியமித்தபடி ஒருவன் கொடுக்கக் கடவன் என்பதன் பொருள் என்ன?
4. ............................ கொடுக்கிறவனிடத்தில் தேவன் பிரியமாயிருக்கிறார்.
5. கொடுத்தல் ................................ யும் தேவனுக்கு .......................... யும் கொண்டு வருகிறது.

## சிறுவர்க்கான கேள்விகள்

1. தேவன் படைத்த முதல் பெண் யார்?
2. அவள் செய்த பாவம் என்ன?
3. அவள் பாவம் செய்யும்படி தூண்டப்பட காரணம் என்ன?
4. தீமையானவர்களுடன் வைக்கும் நட்பின் விளைவு என்ன?
5. கானனிய பெண்ணின் விசுவாசம் எப்படிபட்டதாக இருந்தது?
6. நீங்கள் தேவனை எப்படி விசுவாசிக்கிறீர்கள்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-04-2017**

# ஜீவபுத்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள்

அன்பான சகோதரிகளே! ஆண்டவர் இயேசுவின் பரிசுத்த நாமத்தில் உங்களுக்கு எங்களது வாழ்த்துக்கள். விசேஷமாக உங்கள் அனைவருக்கும் மகளிர் தின நல்வாழ்த்துக்கள். இந்த மாதம் ஜீவ புத்தகத்தில் பெயரெழுதப்பட்டவர்கள் என சொல்லப்பட்ட எயோதியாள், சிந்திக்கேயாள் என்பவர்களை பற்றி தியானம் செய்வோம்.

**பிலி 4:2,3** கர்த்தருக்குள் ஒரே சிந்தையாயிருக்க எயோதியாளுக்கும் சிந்திகேயாளுக்கும் புத்திசொல்லுகிறேன். அன்றியும் என் உத்தம கூட்டாளியே, அவர்களுக்கு உதவியாயிருக்கும்படி உன்னையும் வேண்டிக்கொள்கிறேன்; அவர்கள் கிலேமெந்தோடும் மற்ற என் உடன்வேலையாட்களோடுங்கூடச் சுவிசேஷ விஷயத்தில் என்னோடகூட மிகவும் பிரயாசப்பட்டார்கள், அவர்களுடைய நாமங்கள் ஜீவபுஸ்தகத்தில் இருக்கிறது.

எயோதியாள், சிந்திக்கேயாள் இவர்கள் என்னோடேகூட சுவிசேஷ விஷயத்தில் மிகவும் பிராயாசப்பட்டவர்கள்; அதாவது கர்த்தருக்கென்று ஊழியம் நன்றாக செய்தார்கள் என்றும், இவர்கள் இருவரின் பெயர்களும் ஜீவ புத்தகத்தில் எழுத்தப்பட்டது, அதாவது, தேவன் தன் ஜனங்களை சேர்க்கும் நாளில் அவருடைய ஊழியக்காரர்கள் அவரோடகூட இருப்பார்கள் என்றும், இவர்களைப்பற்றி அப்போஸ்தலனாகிய பவுல் பாராட்டுகிறார்.

ஊழியம் செய்தவர்களுக்கும் ஊழியம் செய்யாதவர்களுக்கும் தேவன், வித்தியாசத்தை ஏற்படுத்தி காண்பிப்பேன். அப்பொழுது நீங்கள் அதை காண்பீர்கள், என்று மல்கியாவில் தேவன் அறைகூவலிடுகிறார். என் சம்பத்தை நான் சேர்க்கும் அந்நாளிலே அவர்கள் என்னுடையவர்களாயிருப்பார்கள் என்று சேனைகளின் கர்த்தர் சொல்லுகிறார்; ஒரு மனுஷன் தனக்கு ஊழியஞ்செய்கிற தன்னுடைய குமாரனைக் கடாட்சிக்கிறதுபோல நான் அவர்களைக் கடாட்சிப்பேன். அப்பொழுது நீங்கள் நீதிமானுக்கும் அவருக்கு ஊழியஞ்செய்யாதவனுக்கும் இருக்கிற வித்தியாசத்தைத் திரும்பவும் காண்பீர்கள் **( மல் 3:17–18 )** என்று கர்த்தர் சொல்லுகிறார்

மேலும் தேவன், தனக்கு ஊழியஞ்செய்கிறவர்களை வர்த்திக்கப்பண்ணுவேன் என அருளும் ஆசீர்வாதத்தை பற்றி எரேமியாவில் வாசிக்கிறோம். வானத்து நட்சத்திரங்கள் எண்ணப்படாதும் கடற்கரை மணல் அளக்கப்படாததுமாயிருக்கிறது போல, நான் என் தாசனாகிய தாவீதின் சந்ததியையும் எனக்கு ஊழிஞ்செய்கிற லேவியரையும் வர்த்திக்கப்பண்ணுவேன் என்று கர்த்தர் சொல்லுகிறார் என்றார். **( எரே 33:22 )**

இந்த உலகத்தில் நாம் வாழும்போது கர்த்தருக்கென்று தினமும் ஊழியம் செய்யனும் என்ற எண்ணத்தை நாம் வளர்த்துக்கொள்ள வேண்டும். எயோதியாளும், சிந்திக்கேயாளும் கர்த்தருக்கென்று நல்மனதுடனும், உற்சாகத்துடன் ஊழியம் செய்தார்கள் என்றும் பார்க்கிறோம். கிறிஸ்தவர்களாகிய நாமும் கூட தினமும் சுவிசேஷ ஊழியத்தை செய்ய வேண்டும். அநேக ஆத்துமாக்கள் சபைக்கு வர முயற்சி செய்ய வேண்டும். அதை நாம் ஏனோ தானோவென்று செய்யக்கூடாது.



பெண்களாகிய நாம் சரீர ரீதியாக பெலவீனபாண்டமாக இருந்தாலும், என்னை பெலப்படுத்துகிற கிறிஸ்துவினாலே எல்லாவற்றையும் செய்ய எனக்கு பெலன் உண்டு என நம்மை நாமே உற்சாகப்படுத்திக்கொண்டு, முயற்சி செய்தால், நம் பிரசாயசங்களைக் குறித்து கர்த்தர் மகிழ்ச்சிக்கொள்வார் மற்றும் மகிமைப்படுவார்.

குறைந்தப்பட்சம் ஒரு நாளைக்கு, ஒரு நபரையாவது சந்தித்து, ஒரு கைபிரதியாவது கொடுத்து, நம் ஊழியத்தின் பாதையை நமக்குள் உற்சாகமாக செய்வோம். ஊழியத்தை உண்மையோடும், உத்தமத்தோடும் செய்தால் கர்த்தர் நம்மை குறித்து சந்தோஷம் அடைவார் மற்றும் அவருடைய கட்டளைக்கு **(மாற் 16:15)** நாம் கீழ்படிவதினாலே அவர் மகிமைப்படுவார். அவரை கனம்பண்ணுகிறவர்கள் அவரால் கனம்பண்ணப்படுவார்கள் என்பதை நாம் மறக்க வேண்டாம். ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்கிறவனால் என்னைப் பின்பற்றக்கடவன். நான் எங்கே இருக்கிறேனோ அங்கே என் ஊழியக்காரனும் இருப்பான்; ஒருவன் எனக்கு ஊழியஞ்செய்தால் அவனைப் பிதாவானவர் கனம்பண்ணுவார். **(யோவான் 12:26).**

ஆம் பிரியமானவர்களே! உண்மையாக அவரைப் பற்றி ஊழியம் செய்யும் போது, இருண்டு கிடக்கிற நம் வாழ்வு வெளிச்சத்தை நோக்கி வர முடியும். அவருடைய அன்பிற்குள் அநேக மக்களை நாம் கொண்டு வர முடியும். நம் ஒவ்வொருடைய பெயரும் ஜீவ புத்தகத்தில் எழுதப்பட வேண்டுமானால் நாமும் தேவனுக்கு உண்மையாய் ஊழியம் செய்ய வேண்டும். நாம் தேவனுக்கு உண்மையாய் ஊழியம் செய்யும் போது, தேவன் எல்லா தேவைகளையும் சந்தித்து, நம்மை மென்மேலும் ஆசீர்வதிப்பார். ஆமென்!

**– சகோதரி. பேபி பிலேமோன்**

# ஜீவனுள்ளோருக்கெல்லாம் தாயாகிய ஏவாள்

சிறுவர் பகுதி

ஹாய் குட்டீஸ்! இயேசு ஆண்டவரின் நாமத்தில் உங்களை வாழ்த்துகிறேன். எல்லாரும் முழு ஆண்டு தேர்வுக்காக ஆயத்தமாக கொண்டிருக்கிறீர்கள் என நம்புகிறேன். உங்களுக்காக எங்கள் ஜெபங்கள் மற்றும் வாழ்த்துக்கள்.



இந்த முறை நாம் இந்த உலகத்தின் முதல் பெண்ணாகிய ஏவாள் என்பவரைப்பற்றி தெரிந்துகொள்ளலாம். தேவன் தாம் படைத்த எல்லா மிருகங்களுக்கும், பறவைகளுக்கும் ஜோடி இருப்பதைக் கண்டார். ஆனால் ஆதாமிற்கோ துணையில்லை. ஆகையால் தேவன் ஆதாமின் விலா எலும்பில் ஒன்றை எடுத்து, அதிலிருந்து அற்புதமாக ஏவளை படைத்தார். பின்பு தோட்டத்திலே நடுவிலிருக்கும் மரத்தின் பழத்தை சாப்பிடக்கூடாது என்று தேவன் கட்டளையிட்டார். அவர்கள் இருவரும் தேவன் கட்டளையிட்டபடி வாழ்ந்து வந்தனர்.

ஒரு நாள் ஏவாள் தனித்திருக்கும் போது, சாத்தான், பாம்பின் வடிவத்திலே வந்து ஏவாளிடம், நீங்கள் தோட்டத்திலுள்ள சகல விருட்சங்களின் கனியையும் புசிக்க வேண்டாம் என்று தேவன் உங்களுக்கு சொன்னது உண்டோ? என்று கேள்வி கேட்டது. ஏவாளும் தேவன் தங்களுக்கு சொன்ன கட்டளையை பற்றி சொன்னாள். சாத்தானோ, அந்த பழம் உண்மையிலேயே நல்லது, அதை சாப்பிட்டால் நீங்கள் தேவர்களைப்போல மாறுவீர்கள் என பொய் சொன்னான். ஏவாள் அந்த வார்த்தையை நம்பி, அந்த பழத்தை தானும் சாப்பிட்டாள் மற்றும் ஆதாமிற்கும் கொடுத்து சாப்பிட வைத்தாள்.

குட்டீஸ்! பைபிள் சொல்கிறது தீமையானவர்களுடன் உரையாடுவது, உறவாடுவது என்பது நல்ல பழக்கங்களை அழித்து, கெட்ட பழக்கங்களை உண்டாக்கும் என்று; பார்த்தீர்களா? ஏவாள், சாத்தானுடன் பேசினதினால், தேவனுக்கு கீழ்படிந்தவள் என்ற நல்ல பழக்கத்தை இழந்து, தேவ கட்டளையை மீறி பாவம் செய்து, மிக கொடிதான சாபத்தை தனக்கும் தன் சந்ததிக்கும் பெற்று தந்தாள். ஆகையால், குட்டீஸ் வேதாகமம் உங்களை தடைசெய்கிறவர்களுடன் சேராதே! உங்கள் அப்பா, அம்மாவும் யார் கூடாயாவது சேராதேயுங்கள், பேசாதேயுங்கள் என்று சொன்னால், அவர்களுக்கு கீழ்படியுங்கள். அது நிச்சயம் உங்களுக்கு நன்மை பயக்கும். அதெல்லாம் கிடையாது நான் அப்படிதான் பேசுவேன், சேருவேன் என்று சொன்னால், செய்தால், அது நிச்சயம் சாபத்தையும், மீளா நஷ்டத்தையும் ஏற்படுத்தும். நீங்கள் நல்ல பிள்ளைகள் தானோ? ஆகையால் தீமையானவர்களுடன் சேராதிருங்கள். கர்த்தர் உங்களை காப்பார்.

**மனன வசனம்:**

**1 கொரி 15:33** "மோசம்போகாதிருங்கள்; ஆகாத சம்பாஷணைகள் நல்லொழுக்கங்களைக் கெடுக்கும்".

**- குயினி பிரதீப்**

# கானானிய பெண்

ஹாய் செல்லங்களே! உங்கள் அனைவருக்கும் ஆண்டவர் இயேசுவின் நாமத்தில் இந்த அக்காவின் வாழ்த்துக்கள். நீங்கள் அனைவரும் முழு ஆண்டு தேர்வில் வெற்றிபெற, நாங்கள் உங்களுக்காக ஜெபிக்கிறோம். நாம இந்த மாதம் ஆண்டவரிடம் விடாமல் ஜெபித்து வெற்றி பெற்ற ஒரு பெண்ணை பற்றி படிக்கலாமா?

ஆண்டவர் இயேசு ஒருமுறை தீரு, சீதோன் என்னும் பட்டணங்களில் ஊழியம் செய்ய சென்ற போது, அந்த ஊரிலே குடியிருந்த கானானிய பெண் ஒருத்தி, ஆண்டவரிடம் வந்து: ஆண்டவரே, தாவீதின் குமாரனே! எனக்கு இரங்கி உதவி செய்யும், என் மகள் பிசாசினால் கொடிய வேதனைபடுகிறாள் என்று சொன்னாள்.




ஆண்டவரோ, அந்த பெண்ணிடம் ஒரு வார்த்தையும் சொல்லாமல் அமைதியாக சென்றார். ஆனால் அந்த அக்கா என்ன பண்ணாங்க தெரியுமா? விடாமல்(தொடர்ந்து) ஆண்டவரிடம் கேட்டுக்கொண்டே

அவரின் பின்னே சென்றாள். இதை பார்த்த அவருடைய சீடர்கள், "ஆண்டவரே". இந்த பெண் கூப்பிட்டுக்கொண்டே வருகிறாளே, இவளுக்கு ஏதாவது சொல்லி அனுப்பிவிடுங்கள் என்று சொன்னார்கள்.

ஆண்டவரோ, சீடர்கள் அந்த அக்காவின் விசுவாசத்தை புரிந்துக்கொள்ள வேண்டும் என்று, அந்த பெண்ணைப்பார்த்து, நான் இஸ்ரவேல் மக்களை இரட்சிக்க வந்தேன். யாரொருவரும் பிள்ளைகளின் உணவை எடுத்து, நாய்க்குட்டிகளுக்கு கொடுப்பது நல்லதல்ல என்று சொன்னார். அந்த அக்கா அதற்கு என்ன சொன்னார் தெரிமா? ஆண்டவரே! பிள்ளைகள் தின்று சிந்துகிற எச்சங்களை நாய்க்குட்டிகள் தின்னுமே; அது மாதிரியாவது உதவி செய்யுங்கள் என்று சொன்னாள்.

ஆண்டவர் அந்த அக்காவின் விசுவாசத்தை பார்த்து, "உன் விசுவாசம் பெரிது! நீ விரும்புகிறபடி ஆகக்கடவது" என்றார். அந்த நேரமே அந்த பெண்ணின் மகள் குணமானாள்.

செல்லங்களே, ஆண்டவர் உதவி செய்யும் வரை அந்த அக்கா எப்படி தொடர்ந்து கேட்டுக்கொண்டே இருந்தார்கள் என்று கவனித்தீர்களா? ஏன் தெரியுமா? அந்த அக்காவின் விசுவாசம் என்பது ஆண்டவரால் இதை செய்ய முடியும் என்பதாக அல்லமால், அண்டவராலே மட்டும் தான் இதை செய்ய முடியும் என்பதாக இருந்தது. ஏனேனில் தேவனாலே தான் எல்லாம் கூடும். நீங்களும் இப்படிப்பட்ட விசுவாசத்துடன் தேவனிடம் கேட்கும் போது நிச்சயமாக பெற்றுக்கொள்வீர்கள். நீங்கள் செய்வீர்கள் தானே?

**மனன வசனம்:**

**மத்தேயு 21:22** "இயேசு அவர்களை நோக்கி: நீங்கள் சந்தேகப்படாமல் விசுவாசமுள்ளவர்களாயிருந்தால், இந்த அத்திமரத்திற்கு செய்வதை நீங்கள் செய்வதுமல்லாமல், இந்த மலையைப் பார்த்து: நீ பெயர்ந்து சமுத்திரத்திலே தள்ளுண்டுபோ என்று சொன்னாலும் அப்படியாகும் என்று, மெய்யாகவே உங்களுக்குச் சொல்லுகிறேன்."

**– பிரியா ஆண்டனி**

# Gospel Through Media by World Evangelism Team

**Philemon Rajah & Kingsly in Tamil on Tamilan TV :** Every Sunday 6.45 - 7.00 a.m (TAMILNADU Contact Mobile : ***92 4421 4421 & 92 4431 4431***) ***Nambikai TV :*** *Every Friday 6.00 - 6.30 a.m.*

**Rajnayagam & Benny Martin in Tamil on Tamilan TV :** Every Monday 7.00 - 7.15 a.m., Every Thursday 9.30 - 10.00 a.m. and Every Saturday 7.15 - 7.30 a.m. - Contact : 98427 30382

**Arjunan in Tamil on Nambikai TV & Radio :** TV : Every Monday & Saturday 7.30 - 7.45 p.m. Radio : Every Saturday 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (TAMILNADU Contact Mobile : 94435 58041)

**Joshua & Ricky Gootam in Telugu on Subhavartha, Aradharana TV :** Every Sunday 6.00 p.m. and Saturday 8.00 a.m. **Rakshana T.V :** Every Wednesday 6.30 p.m. and Thursday 2.30 a.m. (ANDRAPRADESH Contact Phone : 088423 63722)

**P.R. Swamy & Douglas in Tamil on Radio :** Every Sunday to Wednesday at 5.30 - 5.45 p.m. on 25 and 45 meter band of Sri Lanka Radio. (KARNATAKA Contact Mobile : 098440 70763)

**P.K. Varghese in Malayalam on JaiHind TV :** Every Saturday 6.00 - 6.30 a.m. on Jai Hind Channel.

(KERALA Contact Mobile : 94470 35465)

**Sunny, Francis & Vinay David in Hindi on Shubh Sandesh TV :** Every Tuesday 7.00 - 7.30 on Shubh Sandesh Hindi Channel. (NEW DELHI Contact Mobile : 098108 96789)

# மார்ச் மாத கேள்விகள்

1. தன்னிடம் இருந்த உணவை தேவனுடைய மனுசனிற்கு கொடுத்ததினாலே பஞ்ச காலத்தில் காக்கப்பட்டவள் யார்?
2. ஸ்திரீகளுக்குள்ளே ஆசீர்வதிக்கப்பட்டவள் யார்?
3. தன் கர்ப்பம் செத்தும் தேவன் மேல் கொண்ட விசுவாசத்தினாலே பிள்ளை பெற்றவள் யார்?
4. எகிப்திலிருந்து விடுதலையான போது தேவனை துதித்த ஆரோனின் சகோதரி யார்?
5. சாலமோனின் இருதயத்தை வழுவிப்போக செய்தவர்கள் யார்?
6. தன் ஜீவனுக்கு உண்டாயிருந்ததையும் காணிக்கை கொடுத்தவள் யார்?
7. ஆண்டவரின் பாதமருகே அமர்ந்து வசனத்தை கற்றவள் யார்?
8. உயிர்தெழுந்த ஆண்டவரை முதலில் தரிசித்து, அதை அறிவித்தவள் யார்?
9. தங்கள் ஆஸ்திகளால் ஆண்டவருக்கு ஊழியம் செய்தவர்கள் யார்?
10. ஜீவ புஸ்தகத்தில் பெயர் எழுதப்பட்ருக்கிறது என சொல்லப்பட்ட பெண்கள் யார்?

**பதில்கள் வந்து சேர வேண்டிய கடைசி நாள் 05-04-2017**

அனுப்ப வேண்டிய முவகரி : சகோதரி. **பேபி ராஜா**
45C/1, சர்ச் லேன், காரனேசன் தெரு,
அரசரடி, மதுரை - 625 016
செல்: 92 4421 4421, 92 4431 4431

## பிப்ரவரி மாத பதில்கள்

| | | |
|---|---|---|
| 1. 1கொரி 9:25 | 2. மத் 12:45 | 3. 1கொரி 15:33 |
| 4. ஏசா 65:17 | 5. ஏசா 45:5 | 6. கொலோ 3:17 |
| 7. எபி 13:15 | 8. 1கொரி 10:13 | 9. நீதி 14:22 |
| 10. ரோம 2:7 | | |

## பிப்ரவரி மாத கேள்விகளுக்கு பதில் எழுதியவர்கள்

1. Sis.J. லில்லி புஸ்பம் - தூத்துக்குடி
2. Mrs. ஜோன் தேவநாயகம் - நெல்லை
3. Mrs. காந்தா மனோகரன் - திருச்சி
4. R. பியூலா ரமேஷ் - வளர்நகர்
5. S. பாக்கிய ராஜம் - மதுரை
6. I. அலெக்சாண்டர் சாலமோன் - சிவகங்கை
7. Mrs. ஹெலன் திலக் - மதுரை
8. S. கேத்ரின் அருள்நேசம் - மதுரை
9. G. ஏஞ்சலம்மாள் - வளர்நகர்
10. Mrs.D.I. அன்பு சுதந்திரம் - ஏர்வாடி
11. Mrs. ஷோபியா தர்மராஜ் - திருச்சி
12. Dr. இவாஞ்சலின் ஜோன்ஸ் - சேலம்
13. கிறிஸ்டி ஜோசப் - நெல்லை
14. Mrs. ரூபி ஜெபராஜ் - மதுரை
15. A. ரோஸ் மேரி - சென்னை
16. J . விஜய் - வளர்நகர்
17. S. அசோக்குமார் பிரின்ஸ் - தூத்துக்குடி
18. G. அந்தோனி தாஸ் - பரமக்குடி
19. R. சரோஜா - தென்கலம்
20. J. செல்வி ஜெயராஜ் - நாமக்கல்
21. Mr. ஆனந்த கதிரோன் - சென்னை
22. Mrs. சாந்தா ஜெயகுமார் - சென்னை
23. Mrs. S. செல்வி ஜான்ரோஸ் - நாகர்கோயில்
24. K. மோகன் - கொமாரபாளையம்
25. Mrs. லில்லி ஆல்பர்ட் - நெல்லை
26. Mrs. தெல்மா ஸ்டான்லி - மதுரை
27. Mrs. ரூபவதி - நெல்லை
28. Mrs. ஷீலா ரிச்சர்ட்தாஸ் - சென்னை
29. Mrs. சுகந்தி ஜோன்ஸ் - திருச்சி
30. S.ஜெயராஜ் - பொள்ளாச்சி
31. R. ஞான சிரோன்மணி - சமயநல்லூர்
32. Mrs. சந்திரா பீட்டர் - திருச்சி
33. Mrs. மேரி ராஜ் - மதுரை
34. Mrs. ரேச்சல் தமிழரசி - மதுரை
35. Mrs. பிரேமலதா சுந்தர்பாபு - செங்கல்பட்டு
36. Mrs. டெய்சி தர்மராஜ் - புதுக்கோட்டை
37. Mrs. மேரி சாரான் - சமயநல்லூர்
38. சாந்தி வில்லியம் - புதுக்கோட்டை
39. G. பீற்றர் பால்ராஜ் - தூத்துக்குடி
40. B. ஜாய்ஸ் ஜோசுவா - வெள்ளறம்
41. J. மாலதி செல்வம் - சீர்காழி
42. Mrs. ஹெப்ஸி தாமஸ் - படப்பை
43. Dr.D.S. ஜெபநேசன் - திண்டுக்கல்
44. R. அனிதா மார்கிரேட் - குன்னூர்
45. M. தேவசகாயம் ரவி - குன்னூர்
46. R. ஷீலா ரவி - குன்னூர்
47. Mrs. பியூலா ஜேசுராஜன் - பாண்டிச்சேரி
48. Mrs. சாந்தி ஜோயல் - திருச்சி
49. ராணி சாந்தகுமார் - மதுரை
50. Mrs. ஜெயமணி ஜெயபாண்டியன் - கடலூர்
51. S. டேவிட் சாந்தகுமார் - நெல்லை
52. J. ஜான்ஸி - ஆனைமலை

தொடர்ந்து இப்பகுதியில் பங்குபெறும் அனைவருக்கும் வாழ்த்துக்கள் !

# 2017 பிப்ரவரி – மார்ச் மாத ஊழியங்கள்




நெல்லையில் பிப்ரவரி மாதம் நடைபெற்ற பார்வையற்றோர் முகாமில் நமது ஆசிரியர் தேவ செய்தி வழங்கியபோது ..




பார்வையற்றோருக்கு வழங்கப்பட்ட பிரைல் பத்திரிக்கைகளும் பைபிள் சிடியும்...




இம்மாதம் பெங்களூரில் நடைபெற்ற பார்வையற்றோர் முகாம்









பெங்களூரில் இம்மாதம் நடைபெற்ற பெண்களுக்கான சிறப்பு கருத்தரங்கில் சகோதரி பவுலா பேட்ஸ் ஆலோசனை வழங்கிய போது.

Owned, Published & Edited by P.C. PHILEMON RAJAH
Printed at Thee Classic Printers Madurai-1 Phone 2323819
Registered News Paper No. : TNTAM/2011/42166
Postal Registration No. : TN/MA/67/2015-2017
Posted at Arasaradi HPO on 10th, 11th March 2017



## கிருபையுள்ள வார்த்தை வெளியிட்டுள்ள சிறப்பு புத்தகங்கள்






அன்பார்ந்த வாசகர்களே! இந்த அனைத்து புத்தகங்களையும் உங்கள் ஆத்மீக வளர்ச்சிக்கு பயன்படுத்திக்கொள்ளும்படி வேண்டுகிறோம். ரூபாய் 100/-மட்டும் அனுப்பி இப்புத்தக தொகுப்பை பெற்றுக்கொள்ளுங்கள்!



## தபால் வழி பைபிள் பாடங்கள்






அடிப்படை (Basic) மற்றும் முதுநிலை (Advanced)
பைபிள் பாடங்களை தபால் வழியில் படித்து,
அழகிய சான்றிதழும் (Certificate)
முழு பைபிளையும் பரிசாக பெறுங்கள்!

## கைபிரதிகள்



உங்கள் சுவிஷேச ஊழியத்திற்கு
கைபிரதிகள் பல்வேறு தலைப்புகளில்
பாதி விலையில் கிடைக்கும்.
விபரங்களுக்கு
92 4421 4421, 92 4431 4431


If undelivered please return to :

EDITOR
KIRUBAIYULLA VAARTHAI

45 C/1, Church Lane,
Coronation Street, Arasaradi,
Madurai - 625 016. India
E-mail : obey2jesus@gmail.com
Cell : 92 4421 4421, 92 4431 4431

To

Visit www.graciousword.org to read kv magazine online
follow us in facebook : NT Gospel Restorers